★ படை அதிகாரிகளை சந்திரிகா நேற்று சந்திப்பு!

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 7 இதழ் 200
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 23-8-1994

(கொழும்பு)

பிரதமர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நேற்று கொழும்பு ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்தையிலுள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

நேற்றைய தினம் முதன் முதலாக அவர் முப்படைத் தளபதிகளையும் பொலிஸ்மா அதிபரையும் தமது அலுவலகத்தில் சந்தித்தார். பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்தை பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க ஆகியோரும் அங்கு பிரசன்னமாயிருந்தனர்.

முப்படைத் தளபதிகளின்

6ம் பக்கம் பார்க்க

★ முன்னாள் அமைச்சர்களின்
சகல வாகனங்களையும் வாபஸ்பெற டி.பி. உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு வாகனங்கள் உட்பட சகல உத்தியோகபூர்வ வாகனங்களும் வாபஸ்பெறப்பட வேண்டும் என ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க உத்தரவிட்டுள்ளார்.

அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டிருந்த வாகனங்களை அவர்கள் இனிமேலும் வைத்திருக்க முடியாது என ஜனாதிபதி தமது அறிவுறுத்தலில் தெரிவித்துள்ளார். —ஈ-இ

★ பொ. ச. மு. பதவியேற்றதையடுத்து

ஜே ஆர் முன்னாள் அமைச்சர்கள்

நாட்டை விட்டுத் தப்பியோட முயற்சி!

ஹிரு சிங்கள பத்திரிகை தகவல்

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணி பதவி ஏற்றதைத் தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய முன்னாள் அமைச்சர்கள் உட்பட கட்சியின் சுமார் 500 உறுப்பினர்கள் நாட்டைவிட்டு தப்பியோட முயன்றதாக 'ஹிரு' என்ற சிங்கள பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (6-ம் பக்கம் பார்க்க)

ஊழல்கள் புரிந்தோரின் குடியுரிமை பறிக்கப்படும்

- அரசு தரப்பினர் எச்சரிக்கை

(கொழும்பு)

கடந்த காலங்களில் ஊழல் மோசடிகள் புரிந்தவர்களின் குடியுரிமை பறிக்கப்படும் என புதிதாக பதவியேற்ற சில பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினர் பகிரங்கமாக அறிவித்துள்ளனர். இதற்கென பிரத்தியேக (6-ம் பக்கம் பார்க்க)

லஞ்சம், ஊழலைத் தடுக்க விரைவில் சட்டம் அமுலாகும்

— பேராசிரியர் பீரிஸ்

(கொழும்பு)

லஞ்சம், ஊழல் ஆகியவற்றைத் தடுப்பதற்கு விரைவில் சட்டம் கொண்டுவரப்படுமெனவும் புதிய சட்டம் [illegible] வரையறுக்கப்படுவது 7 வார [illegible] களுக்கும் பூர்த்தி செய்யப்படவுள்ளதாகவும் நாட்டு வர்த்தக, நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் வெளி (6-ம் பக்கம் பார்க்க)

முன்னாள் அமைச்சர்கள் பாதுகாப்பு கோருகின்றனர்

(கொழும்பு)

தமக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக, முன்னாள் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஜனாதிபதி விஜேதுங்கவிடம் முறையிட்டு செய்துள்ளனர். இதனையடுத்துத் தமக்குத் தொடர்ந்து பாதுகாப்பு வழங்குமாறும், தமக்கு ஏற் 6ம் பக்கம் பார்க்க

லேக்ஹவுஸ், வாஹினி - ரி.வி. இயக்குநர் சபையை அரசு பதவி விலக கோரிக்கை!

(கொழும்பு)

லேக்ஹவுஸ் நிறுவனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினி கூட்டுத்தாபனம், அரச திரைப்படக்கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் இயக்குநர் சபை அங்கத்தவர்கள் உடன் இராஜினாமா செய்யுமாறு அரசு கோரியுள்ளது.

நடந்து முடிந்த தேர்தலில் அரசு ஊடகங்கள் இருந்த இந்த பொதுசன [illegible] விதப் பணிகள் ஐக்கியதேசியக் (6ம் பக்கம் பார்க்க)

அமைச்சர்கள் நேற்று கடமைகளை ஏற்றனர்

(கொழும்பு)

புதிய அமைச்சர்கள் நேற்று தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டனர்.

கல்வி-உயர்கல்வி அமைச்சர் திரு. றிச்சட் பத்திரண நேற்று தமது அமைச்சின் அதிகாரிகளை (6ம் பக்கம் பார்க்க)

ஊரடங்கு முற்றாக இன்றுமுதல் நீக்கம்

(கொழும்பு)

நாடுமுழுவதும் அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் இன்று முதல் முற்றாக நீக்கப்படுகின்றதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது- (6-ம் பக்கம் பார்க்க)

★ பொலநறுவையில்
புலிகள் தாக்குதல் 2 சிப்பாய்கள் பலி

(கொழும்பு)

பொலநறுவைப் பகுதியில் கடந்த 17ம் திகதி விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின்போது, இரு இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட்டதாகப் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைகள் செயலகம் நேற்று அறிவித்தது.

பொலநறுவை - [illegible] பிரதான வீதியால் சென்று கொண்டிருந்த இராணுவ அணி மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போதே சிப்பாய்கள் இருவர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. ஈ-இ

★ செப்டெம்பர் 15-ம் திகதி
தியாகி திலீபன் நினைவுகூரல் நிகழ்வு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் 7ம் ஆண்டு நினைவு கூரல் நிகழ்வை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15-ம் திகதி தொடக்கம் 26ம் திகதி வரை தமிழீழமெங்கும் அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

காலை 7-00 மணி தொடக்கம் பிற்பகல் 5-00 மணிவரை மக்கள் தியாகி திலீபனின் படத்திற்கு ஈகைச் சுடர் ஏற்றி அடையாள உண்ணா விரதங்கள் மேற்கொள்வர். திலீபனின் பதாகை, [illegible] பல இடங்களிலும் தொங்க

2ம் பக்கம் பார்க்க

கிளாலி-பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகு சேவை இன்று செவ்வாய்க்கிழமை வழமையான நேரத்துக்கு நடைபெறுமென விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

வரி விளம்பரம்

O/L MATHS 94

நிச்சயம் Credit, Distinction பெறவேண்டுமா? ஆரம்பத்திலிருந்து (ஆண்டு 5 செப்டம்பர் 10 வரை) உங்கள் வினாவிடை மூலம் B, Sc ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, மணல்தறை ரோட், திருநெல்வேலி;
இ-1192

தேவை

உங்கள் நிறுவனத்தில், உங்கள் வீட்டில் தமிழ் தட்டச்சு [illegible] விருப்பமாக இருக்கின்றதா? உடன் தொடர்பு கொள்க நிர்வாகி சக்தி, கணினி அக்கடமி, நெல்லியடி M.M.V வீதி, கரவெட்டி.
இ-1194

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

தமிழக காங்கிரஸில் உட்கட்சிப்போர்; மூப்பனார் - வாழப்பாடி பலப்பரீட்சை

(சென்னை)

இரண்டு அரசியல் கட்சிகளுக்கிடையே உள்ள உறவுகள் வலுப்படுவதும், அதேவேளையில் பலவீனப்படுவதும் இவ் உறவு முறைகளுக்கிடையே புதிய புதிய சூத்திரங்கள் உருவாவதும் தமிழக அரசியல் என்றுமே இல்லாத ஒரு வாழ்க்கைப் பாடம் செய்கின்றது என பி. பி. சி. தமிழக அரசியல் நிலவரம் பற்றிய தனது ஒலிபரப்பில் தெரிவித்துள்ளது.

அக்கண்ணோட்டத்தில் மேலும் தெரிவிக்கையில் தேசிய நிலையும், விவகாரத்தால் இங்கு இரவும் பகலும் வேகமாக மாறி மாறி வந்து கொண்டிருக்கின்றன. இப்போதைக்கு இந்திரா காங்கிரஸின் பெயர் அதிகமாக அடிபடுகிறது. தமிழ்நாடு காங்கிரஸின் ஜி. கே. மூப்பனாருக்கும், வாழப்பாடி ராமமூர்த்திக்கும் இடையில் கருத்து வேறுபாடு இருப்பது பகிரங்க இரகசியம். ஒற்றுமை ஒற்றுமை என்று வெளியே இரு தலைவர்களும் கூறிக் கொண்டாலும் உள்ளே பூசலும் எதிர்ப்புமாய் மோதிக் கொண்டிருப்பது புதிய செய்தி அல்ல.

சமீபத்தில் சிவாஜியின் பெயரை நடுவில் இழுத்து ஏற்கனவே விலகிக்கொண்டிருக்கும் உட்பூசலை மேலும் கிளறிவிட்டிருக்கிறார் வாழப்பாடி ராமமூர்த்தி. சிவாஜி மீண்டும் காங்கிரஸில் சேர்வதற்கு மூப்பனார்தான் முட்டுக்கட்டையாக இருக்கிறார் என ராமமூர்த்தி [illegible] உரக்கப் போட அது பற்றிக்கொண்டு விட்டது.

இதற்கிடையில் தொழிற்சங்கத் தலைவர் [illegible] தலைமையில் [illegible] பேர் இ. காங்கிரஸில் சேர்ந்துள்ளனர். இதுபெரும் விழாவாக திருநெல்வேலியில் அண்மையில் கொண்டாடப்பட்டது. இதனால் காங்கிரஸ் கட்சி தமிழ் நாட்டில் வலுப்பெற்று கோட்டையை குறி வைக்குமா என்பது வேறு விடயம்.

இதேவேளையில் ஆகஸ்ட் 19ம் திகதி கோவையில் கொடியேற்றி தமிழக முதல்வர் ஆற்றிய உரை மேலும் பல குறிப்புகளை வெளிக்காட்டியுள்ளது எனலாம். கடந்த வருடம் [illegible] காங்கிரஸ் [illegible] விலகிய முதல்வர் இம்முறை [illegible] ஒருவேளையும் குறைகூறவில்லை.

இதேவேளையில் இந்திரா காங்கிரசும் அ. தி. மு. க. வும் மீண்டும் இணைய முடியும். முறிந்து போயிருக்கும் உறவு மீண்டும் தளிர்க்க முடியும் மீண்டும் ஒரு தேர்தலுக்கு இரு கட்சிகளும் ஆயத்தமாவது போலத் தெரிகிறது என அரசியல் நோக்காளர்கள் கருதுகிறார்கள்.

இதற்கிடையில் மத்திய அமைச்சர் அருணாசலம் பற்றி [illegible] மத்திய உரை மாற்றும் போது அ.தி.மு.க வில் எம். ஜி. ஆரோ இணைந்த முதலமைச்சர்களும், எம். பி., எம் எல். ஏ.க்களும் அக்கட்சியிலிருந்து விலகி இந்திரா காங்கிரசில் சேரவேண்டும் என மதுரை [illegible] விருதுநகரில் அதனை ஒரு சிறப்பு விழாவாக கொண்டாட எண்ணியுள்ளோம் என தெரிவித்தது அ. தி. மு. கவின் கோபத்தை கிளறிவிட்டுள்ளது.

அமைச்சர் கூறியிருப்பது ஆதாரமற்ற ஒரு செய்தி [illegible] தெம்பூட்டும் வகையில் அமைந்த பேச்சாக அது இருக்கலாம் எனவும் அதில் உண்மையேதும் இல்லையெனினும் அது மறுப்பு அறிக்கை வெளியிட்டது.

ஆளும் கட்சியிலிருந்து விலகி பிறிதொரு கட்சியில் சேர்வது ஒரு காரியம் என்றும் அக்கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்படுகிறது. -ஏ-இ

விளையாட்டு உபகரணங்கள் விநியோகம்

(நெல்லியடி)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் உள்ள சுமார் 20 விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன.

கரவெட்டி பிரதேச செயலர் பணிமனையில் நடைபெற்ற இவ்வைபவத்திற்கு பிரதேச செயலர் திரு. செ. ஸ்ரீநிவாசன் தலைமை வகித்தார்.

யாழ் செயலக [illegible] திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு வி. எஸ் சுவாமிநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். —160

நீரில் மூழ்கி மரணம்

([illegible])

கிணற்றில் தண்ணீர் எடுப்பதற்காக நின்ற சிறுமி ஒருவர் தவறுதலாக கிணற்றில் விழுந்து நீரில் மூழ்கி மரணமானார். கடந்தவாரம் நடந்த இச்சம்பவத்தில் [illegible]யைச் சேர்ந்த செல்வி சரண்யா சிவராசா (வயது 09) என்பவரே மரணமானவராவார். (59)

வடமராட்சி கடலில்

பீரங்கி தாக்குதல்

(நெல்லியடி)

கடலில் ரோந்து சென்ற கடற்படையினரின் பீரங்கித் தாக்குதலினால் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் உடமைகளை விட்டு கடலில் குதித்து நீந்திக் கரை சேர்ந்தனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 7-30 மணியளவில் வடமராட்சி கடற்பிரதேசமான வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு கடலில் நிகழ்ந்துள்ளது.

சுமார் 15 நிமிட பீரங்கித் தாக்குதலால் மீனவர்கள் அச்சமடைந்து கடலில் குதித்து கரை சேர்ந்துள்ளனர். எவருக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை. —160-இ

மழை நீரை சேமித்து பயன்படுத்த திட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழம் ஒரு சில மாதங்களே மழைவீழ்ச்சியைச் செறிவாகப் பெற்றுக்கொள்ளும் வரண்ட வலயப்பிரதேசமாகும். இதனால் குறுகிய காலத்தினுள் கிடைக்கும் மழைநீர் முழுமையாகப் பயன் படுத்தப்படாமல் பெருமளவு வீணாக பாய்ந்தோடி கடலில் கலக்கின்றது. இவ் இழப்பைத் தவிர்த்து தமிழீழத்திற்குக் கிடைக்கும் ஒவ்வொரு துளிநீரையும் சேமித்து பயன்படுத்தவென பலவகைப்பட்ட வகுக்கப்பட்ட வேலைத்திட்டம் ஒன்றை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் துறைசார் நிபுணர்களின் துணையுடன் ஆராய்ந்து தூய நீர்வள மேம்பாட்டுத் திட்டம் என்ற பெயரில் நடைமுறைப்படுத்த முக்கியமான ஒரு [illegible]. நிலத்தடி நீர்வள மேம்பாட்டு திட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கையாக மேற்கொள்ளப்படுகின்றன ஐந்து ஆண்டுகளுக்குள் புனரமைக்க வேண்டிய குளங்கள், வாய்க்கால்கள் அணைக்கட்டுகள் என்பவற்றின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் இக்குளங்கள் வாய்க்கால்களை புனரமைத்து விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்தொழில் அபிவிருத்தி என்பவற்றை மேம்படுத்தும் முகமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பிரதேச செயலகம். பிரதேசசபை, நீர்ப்பாசனத் திணைக்களம், கமநல சேவை திணைக்களம் ஆகியவற்றின் தொழில்நுட்பவியலாளர்களை ஒன்றிணைத்து இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

திருத்திய வைக்கப்படும் குளங்களின் பயன்பெறுவோர்களே வேலைகளைச் செய்து பராமரிக்கவென கிராமிய குழுக்கள் ஊடாக கிராமங்கள் தோறும் குழுக்கள் அமைத்து செயற்படவும் ஒழுங்குகள் செய்யப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

நிரந்தர

வைத்திய அதிகாரி இல்லை நோயாளிகள் பாதிப்பு

(நெல்லியடி)

வடமராட்சி கிழக்கிலுள்ள மருதங்கேணி, அம்பன் கிராமிய வைத்தியசாலைகளில், நிரந்தர வைத்திய அதிகாரி இல்லாமையால் வைத்தியசேவை பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதனால் நோயாளர்கள் அவதியுறுகிறார்கள்.

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி நீண்ட நாட்கள் விடுமுறையில் சென்றிருப்பதனால் அம்பன் மத்திய மருந்தகத்தின் உதவி வைத்திய அதிகாரி டாக்டர் திரு. எஸ். நடராஜன், காலையில் இவ் வைத்தியசாலையிலும், மாலையில் மருதங்கேணி வைத்தியசாலையிலும் கடமையாற்றி வருகின்றார். இவ்விதம் இரு நேரங்களிலும், இரு இடங்களிலும் நோயாளர்கள் பெரும் பாதிக்கப்பட்டுமிருக்கின்றனர்.

இதனை நிவர்த்தி செய்ய மருதங்கேணி கிராமிய வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவரை உடனடியாக நியமிக்குமாறு நோயாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரியவருகிறது.

(160)

பட்டிப்பளை பகுதியில் புதிய படை முகாம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பட்டிப்பளை உதவி அரச அதிபர் பிரிவில் தாந்தாமலைக்கும் — [illegible] பகுதிக்குமிடையே தற்காலிக இராணுவமுகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த மாத இறுதிப்பகுதியில் இந்த இராணுவமுகாம் அமைக்கப்பட்டது. 400க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் இங்கு நிலைகொண்டுள்ளனர்.

இத்துடன் கடுக்காமுனை அம்பலத்தடி பகுதியில் படையினர் அடிக்கடி சுற்றிவளைப்புக்களை நடத்தி மக்களை துன்புறுத்தி வருகின்றனர். -இ

செப்டெம்பர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடப்படவும் இருக்கின்றன.

பாடசாலை மட்டத்தில் 11 நாட்களும் ஒன்று கூடல் நிகழ்வில் தியாகி திலீபனின் படத்துக்கு மலர் தூவி வணக்கம் செலுத்துவதோடு நினைவு கூரல் கருத்துரைகள் வழங்கப்பட இருக்கின்றன.

பொது மக்களுக்கு நல்லை நாற்கூடல் இடங்களில் பிரசாரங்களும் செய்யப்படும்.

இறுதி நாளான 26-ம் திகதி காலை 8-00 மணிதொடக்கம் 5-00 மணி வரை [illegible] மண்டபத்தில் உண்ணாவிரதம் மேற்கொள்வதோடு, இரவு 7-00 மணிக்கு வீர வணக்க பொதுக் கூட்டங்கள் இடம் பெறவும் இருக்கின்றன; அத்துடன் கலை நிகழ்வும் இடம் பெறவுள்ளன. (ம)

“ஜெயா அழகு மாடம்”

எமது ஸ்தாபனத்தின்
∴ காட்சியகமும், விற்பனையகமும் ∴
நல்லூரில் அமைத்துள்ளோம்
என்பதை
வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.
காட்சியகம்
பொருண்மிய மேம்பாட்டுக் கழக
காட்சியகத்திற்கு வடக்கு பக்கம்
(ஏ-4295)

பதவி வெற்றிடங்கள்

உள்ளக கணக்காய்வாளர்
பதவிகள் - ஆண்கள்

பல்வேறு துறைகளில் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வரும் பிரபல நிறுவனம் ஒன்றிற்கு கணக்காய்வு செய்வதற்கு மேற்படி பதவிக்கு தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமை:

01. க. பொ. த உயர்தரப் பரீட்சையில் வணிகத்துறையில் குறைந்தது மூன்று வர்த்தகப் பாடங்களில் சித்தி பெற்றிருக்கவேண்டும்.

அல்லது

02 கணக்குப் பதிவாளராக அரச/கூட்டுத்தாபன/தனியார் நிறுவனங்களில் கடமை புரிந்தவர்கள்.

அல்லது

03. அரசாங்க/கூட்டுத்தாபன/தனியார் சேவையில் கணக்காய்வாளராகக் கடமை புரிந்த இளைப்பாறியவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 31-08-1994

விளம்பர இலக்கம்! ஏ-4301
மேற்பார்த்து ஈழநாடு
யாழ்ப்பாணம்
(ஏ-4301)

ஈ. பி. டி. பி.யை ஒருபோதும் சேர்த்துக்கொள்ள மாட்டோம்

சிரேஷ்ட அமைச்சர் கூறுகிறார்

(கொழும்பு)

முன்னைய ஆளும் கட்சியான ஐ. தே. க.வின் ஆயுதக்குழுக்களில் ஒன்றான ஈ. பி. டி. பி.யின் [illegible] தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட 9 உறுப்பினர்களையும் பொதுசன ஐக்கிய முன்னணி தங்களுடன் சேர்த்துக்கொள்ள விரும்பவில்லை என அதன் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஈ. பி. டி. பி. உட்பட ஏனைய இயக்கங்கள் கொழும்பில் ஆயுதங்களுடன் நடமாட அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும் ஈ. பி. டி. பி.யினருடனான பாதுகாப்பு அமைச்சின் அனுமதி [illegible] மறுமுறை செய்யப்படும் எனவும் ஐ. தே. க. ஆதரவுடன் ஈ. பி. டி. பி. பெற்ற சகல அரச [illegible] நிறுத்தப்படுவதாகவும் பொதுசன ஐக்கிய முன்னணி கூறியுள்ளது.

தற்போது ஐ. தே. க. [illegible] இருந்தும் ஈ. பி. டி. பி. [illegible] தெரிவிக்கப்படுகிறது. (வி)

பொஸ்னியா மீது

சேர்பியர் ஷெல் வீச்சு

7 சிறுவர் துடிதுடித்து பலி

(லண்டன்)

பொஸ்னியாவில் சேர்பியப் படையினர் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் 7 சிறுவர்கள் உடல் சிதறி பலியானார்கள். 7 பேர் காயமடைந்தனர்.

பொஸ்னியாவின் "பிகாச்" பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாடசாலை ஒன்றிலிருந்து சிறுவர்கள் வெளியேறிக் கொண்டிருந்தபோது இத்தாக்குதல் நடாத்தப்பட்டதாக ஐ. நா. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் சேர்பியப் படையினருக்கும் முஸ்லிம் தீவிரவாதிகளுக்கும் இடையில் கடும் மோதல் சம்பவங்கள் இடம்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. ஏ

குடும்பநல

சேவையாளர் பெயர் மாற்றம்

(தெஹிவளை)

சுகாதார திணைக்களத்தில் பணிபுரியும் குடும்பநல சேவையாளர்களை "மருத்துவமாது" என அழைக்குமாறு கோரும் 4.85 இலக்க சுற்றறிக்கை, கொழும்பு சுகாதார அமைச்சினால் [illegible] பிரசுரிக்க [illegible] அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இச்சுற்றறிக்கை பிரசுரிக்கப்பட்ட [illegible] அனுப்பி வைக்கப்படுவதாக தெரிய வருகின்றது. -160

ஆற்றல் இல்லாத தமிழ் குழுக்கள்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தவிர தமிழ் அமைப்புகள் எதுவுமே ஸ்ரீலங்கா அரசுக்கு எதிரான போராட்டத்தை நடாத்தும் ஆற்றலை இழந்துவிட்டன என கொழும்பு வாரப்பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில்- தாம் செயற்படுவதனை வெளிப்படுத்தவேண்டும் என்றும் நாடாளுமன்றில் [illegible] ஆசனங்களையாவது பெற்றவேண்டும் என்பதே அக்கட்சியின் நோக்கமாக உள்ளது.

பாராளுமன்ற பொதுத்தேர்தலானது தமிழ் மக்களின் பொறுத்தவரையில் எவ்வித திருப்தியையும் கொண்டுவரப் போவதில்லை என்பதை தமிழ் மக்கள் நன்குணர்ந்துகொண்டு விட்டதாகவும் அப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. —ஏ

கடந்த தேர்தலில்

பொதுப் பணத்தில் பிரசார வேலை

(மட்டக்களப்பு)

அண்மையில் நடைபெற்று முடிந்த தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் போட்டியிட்ட தேசவிரோதக் குழுவொன்று அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதியை தவறாகப் பயன்படுத்தியதாக [illegible] செய்திகள் தெரிவிக்கின்றன.

மக்கள்-அம்பாறை [illegible] நிவாரணத் திட்டமொன்று கொழும்பிலுள்ள அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றிடமிருந்து இக் குழுவினை [illegible] இவ்வாறு பணத்தை தமது கட்சி நடவடிக்கைகளுக்கு இத் தக்குழு பயன்படுத்தியதாகவும் பிரச்சார வேலைகளுக்கு செலவழித்ததாகவும் தெரிக்கப்படுகிறது. இ-ஸ

பாலர் பாடசாலைகளுக்கு

கல்வித்துறையில் முக்கிய இடம்

(வட்டுக்கோட்டை)

"பாலர் பாடசாலைகள் கல்வித்துறையிலே முக்கிய இடத்தை வகிக்கின்றன. இப் பாடசாலைகள் [illegible] கல்வி [illegible] சிறந்த [illegible] விளங்குகின்றன.

வட்டு- [illegible] கிராம முன்னேற்றச் சங்க பாலர் பாடசாலை [illegible] விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய [illegible] புஷ்பராசா மேற்கண்டவாறு கூறினார். 136

அம்பாறையில் தமிழருக்கு பெரும் நெருக்கடி

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் [illegible] கிராமசேவையாளர்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் [illegible] அப்பகுதிகளில் நிவாரண உதவிகள் வழங்குவதில் பெரும் ஊழல் [illegible] தெரிவிக்கப்படுகிறது.

வழங்கப்படும் நிவாரண உதவியில் ஒரு பகுதியை [illegible] வருகின்றனராம்.

இதேவேளை இப்பகுதிகளில் [illegible] செய்திகள் [illegible] தமிழர்கள் [illegible] வருகின்றனர்.

மேலும் வீடுகளில் [illegible] உரையாடுவதையும் தவிர்க்குமாறு [illegible] வற்புறுத்துகின்றனராம். ஏ-ஸ

கண் சிகிச்சை முகாம்

25பேர் கண்ணாடி பெற்றனர்

(தெஹிவளை)

[illegible] நூற்றாண்டு விழா நிகழ்வை [illegible] இலவச கண் சிகிச்சை முகாம் [illegible] இடம் பெற்றது.

[illegible] இவ் இலவச கண்சிகிச்சை முகாமை [illegible] 12 [illegible] சேர்ந்த ஏழு டாக்டர்களும் [illegible] இன்னும் பலர் கலந்து கொண்டனர்.

நூற்றுக்கணக்கான கண் பார்வையற்ற நோயாளர்கள் வருகை தந்திருந்த போதும் சுமார் 25 பேர் இலவசமாக [illegible] கண்ணாடிகளைப் பெற்றுச் சென்றனர் -160

தலைமன்னார் - ராமேஸ்வரம்

கடலை ஆழமாக்கத்த முதல்வர் கோருகிறார்

(சென்னை)

இராமேஸ்வரம் [illegible] தலைமன்னாருக்குமிடையில் கடலை ஆழப்படுத்தும் நடவடிக்கைக்கு அனுமதியளிக்குமாறு தமிழகமுதல்வர் செல்வி ஜெயலலிதா பிரதமர் நரசிம்மராவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

[illegible] நிதியில் [illegible] இந்நடவடிக்கை [illegible] முலம் பெருமளவு அந்நியச் செலாவணியை மீதப்படுத்த முடியுமென்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்நடவடிக்கை மூலம் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் [illegible] தடுக்கப்படுவதாக இருக்குமெனவும் [illegible]." ஏ-ஸ

திருடப்பட்ட பொருட்களுடன் சந்தேகநபர் கைது

(உடுவில்)

மருதனார்மடம் [illegible] வீதியில் உடுவிலில் [illegible] ஸ்ரூடியோவில் இருந்து [illegible] பொருட்களுடன் சந்தேகநபர் ஒருவரை சுன்னாகம் பொலிஸ்துறையினர் கைதுசெய்துள்ளனர்.

தெல்லிப்பழையில் இருந்து இடம்பெயர்ந்து வந்துள்ள ஒருவரால் நடாத்தப்படும் இந்த ஸ்ரூடியோ நிறுவனத்தின் பின்புற கதவுகள் உடைக்கப்பட்டு 35 மி. மீ. கமரா, 1.20 கமரா, [illegible] லென்ஸ், [illegible] உட்பட 20,000 ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டனவாம்.

சுன்னாகம் பொலிஸ்துறையில் இக்களவு சம்பந்தமாக செய்யப்பட்ட முறைப்பாட்டினை தொடர்ந்து இடம்பெயர்ந்து [illegible] சந்தேகநபர் ஒருவரை பொலிஸ்துறையினர் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டபோது [illegible] பொருட்கள் பல [illegible] மீட்கப்பட்டனவாம்.

விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (109)

மண்ணெண்ணெ விநியோகம்

(உடுவில்)

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் [illegible] மண்ணெண்ணெ விநியோகத்துக்கான மாணவர் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த 14-ம் திகதி மண்ணெண்ணெ எடுக்கத் தவறிய தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் தமது கல்லூரி அனுமதி அட்டையை ஆதாரம் காட்டி மண்ணெண்ணெ பெற்றுக்கொள்ளலாம். மண்ணெண்ணெ வழங்கப்படும்பொழுதே இது [illegible] எனவும் [illegible] தெரிவித்துள்ளார். —109

கஷ்டமான காலங்களில்தான் கூட்டுறவின் முக்கியத்துவம் உணரப்படுகின்றது

(உடுவில்)

சங்கங்கள், உழைப்பாளிகள் [illegible] இது போன்ற [illegible] கஷ்டமான காலங்களில் தான் கூட்டுறவின் முக்கியத்துவம் உணரப்படுகிறது. தமிழ் மக்களுக்கு பல தொல்லைகளும் கஷ்டங்களும் சூழ்ந்துள்ள இக்கால கட்டத்தில் கூட்டுறவாளர்கள் [illegible] உணர்ந்து பொறுப்புணர்ந்து சேவை புரிய வேண்டும்.

[illegible] கூட்டுறவாளர் [illegible] தெல்லிப்பழை [illegible] கூட்டுறவு [illegible] நடாத்திய கூட்டுறவுதின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய [illegible] மேற்கண்டவாறு கூறினார்.

திரு. [illegible] குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் அவர் மேலும் கூறியதாவது:

[illegible] ஏற்படுத்தப்பட்ட [illegible] எமது [illegible].

பனைவள [illegible] கொண்டு பல [illegible] செய்யப்பட்டுள்ளன. [illegible] மருத்துவ [illegible] உள்ள மக்களுக்கு இலவசமாக வழங்கி வருகிறோம் என்றார். -109

பிரசாரத்தில் கூறியது போல் சந்திரிகா செயற்பட்டு வருகிறார்

(கொழும்பு)

ஐ. தே. கட்சியின் ஆட்சியில் [illegible] அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவையைக் கொண்டிருந்தது. நாம் ஆட்சிக்கு வந்தால் எமது அமைச்சரவையை மிக சிறியதாகவே அமைப்போம் என்று தேர்தல் காலத்தில் பிரதமர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க கூறியதை தற்போது நிரூபித்துக்காட்டியுள்ளார் என்று அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

ஐ. தே. கட்சி அரசு தனது அமைச்சரவையில் மொத்தம் 91 அமைச்சர்களை அங்கம் வகிக்க நியமித்தது மட்டுமல்லாமல் அவர்களின் ஆடம்பர வாழ்க்கைக்கு மாதந்தோறும் கோடிக்கணக்கான பணத்தை செலவு செய்து வந்தது.

நாம் ஆட்சிக்கு வந்தால் அமைச்சரவையின் எண்ணிக்கையை குறைப்பதுடன் அவர்களுக்கு வழங்கப்படும் ஆடம்பர [illegible] குறைப்போம் என்று கூறியிருந்த பிரதமர் சந்திரிகா தற்போது அமைச்சரவையில் 22 அமைச்சர்களை மட்டும் தற்போது நியமித்திருப்பது அவர் ஆட்சிக்கு வருமுன் வழங்கிய வாக்குறுதியை படிப்படியாக நிறைவேற்றுவார் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும் என்றும் அவதானிகள் மேலும் தெரிவித்துள்ளார்கள். வி-ஸ

பொருளாதார வளத்தை சித்தரிக்கும் பொருண்மிய நிறுவன கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தில் நடைபெற்று வரும் போர்ச்சூழ்நிலையை கருத்தில் கொண்டு எமது பிரதேசத்தின் பொருளாதாரத்தை கட்டி எழுப்பி சகல துறைகளிலும் தன்னிறைவு நிலவவேண்டும் என்ற விரிவுபட்ட நோக்குடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பலதரப்பட்ட துறைசார் திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தி வருகிறது. கல்வித்துறைசார் திட்டங்களின் [illegible] நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு நல்லூரில் தமிழீழ அரசியல் துறை பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வனால் வைபவரீதியாக திறந்துவைக்கப்பட்டது.

இன்றைய போர்க்காலசூழ்நிலையில் அரசினால் விதிக்கப்பட்டுள்ள பல்வேறுவகை தடைகளையும் முறியடித்து எமது பிரதேசத்தின் வளர்ச்சியில் தன்னிறைவு காணும் வகையில் இக்கண்காட்சி மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. பல்வேறு வழிமுறைகள் கொண்ட இத்திட்டங்கள் வரைபடங்கள் மூலமும், ஒளிப்படங்கள் மூலமும் சித்தரிக்கப்படுகின்றது. எமது பொருளாதார வளங்களான விவசாயம், மீன்பிடி, பனை, தென்னை அபிவிருத்தி போன்ற பிரதானமான திட்டங்கள் இக்கண்காட்சியில் மிகத்தெளிவாக சித்தரிக்கப்பட்டுள்ளன.

கைத்தொழில், உணவு பதனிடல் விவசாயம், விலங்கு வேளாண்மை உட்பட கால்நடை வளம், [illegible], வர்த்தகம், பனை தென்னை அபிவிருத்தி திட்டங்கள் போன்ற பலவகையான செயல் திட்டங்கள் தற்பொழுது நடைமுறையில் செயல்பட்டு வருகின்றன.

தமிழீழத்தில் நடைபெற்று வரும் போர் நடவடிக்கைகளினால் மக்களுக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்படாவகையில் சுயதேவையான தானிய உற்பத்தியில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தி வருகிறது. இந்த வகையில் கம்புத் தானியத்தைப் பெருமளவில் பயிரிட வேண்டும் என்ற முக்கியத்துவத்தை உணர்ந்து 1990-ஆம் ஆண்டில் வெளிநாட்டிலிருந்து இத்தானிய வகைகளை இங்கு தருவித்து அறிமுகப்படுத்தியது. இத்தானியம் மக்களுக்கு மிகத் தேவையான போஷாக்கு நிறைந்த சத்துணவாக கருதப்படுகிறது.

எமது நாடு பொருளாதார ரீதியில் தன்னிறைவு காண வேண்டும் என்ற நோக்கில் சிறிய வேளாண்மை மேற்கொள்ளும் வழிமுறைகள் பற்றி இக்கண்காட்சியில் மிகத்தெளிவாக விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இந்த வகையில் பலன் தரும் மரங்கள் இக்கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. எமது வளவில் நாம் செய்கைபண்ண வேண்டிய பலன்தரு மரங்களான இள தென்னை, மாது, பலா, எலுமிச்சை, மாதுளை, [illegible], [illegible] கீரை, கற்பூர வள்ளி, அகத்தி, [illegible] முருங்கை, சாம்பாரை, பசளி, இஞ்சி, கறிவேப்பிலை, கிறுகுறிஞ்சா போன்ற பலன்தரு மரங்கள் பதியங்கள் வளர்ப்பதனால் நிறைந்த பலனைப் பெறக்கூடியதாகவுள்ளது.

எமது பொருளாதார வளர்ச்சியை மேலும் மேம்படுத்தும் வகையில் கிராமிய உற்பத்திக் குழுக்களுடன் இணைந்து பொதுமக்கள் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். இதில் சமூகப் பணிகளான துப்புரவு செய்தல், பொது இடங்கள், வீதிகள், குளங்கள் போன்ற சிரமதானங்கள் மூலம் [illegible] புள்ளி விபரங்கள் இக்கண்காட்சியில் சித்தரிக்கப்பட்டுள்ளன. [illegible], யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரை ஒரு கோடி 50 லட்சம் ரூபாவுக்கு மேல் பெறுமதி வாய்ந்த சிரமதானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டமொன்றை பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கோழி வளர்ப்பு, [illegible] சாயம் கைத்தொழில், மட்பாண்டம் போன்றவற்றை எமது பிரதேசத்தில் ஊக்குவித்து வருமானம் குறைந்த மக்களுக்கு இத்தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு வருவது இக்கண்காட்சியின் புள்ளிவிபரங்களிலிருந்து தெரியவருகிறது.

இதுதவிர மின்பிறப்பாக்கி ஒரு உற்பத்தி, [illegible] நீர் விநியோகம், சிக்கனச் சூட்டடுப்பு, சுண்ணாம்பு உற்பத்தி போன்ற பலவகையான உற்பத்திகள் எமது பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சகல வகைகளும் உண்டு என்பதை இக்கண்காட்சி மூலம் அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் சென்று இக்கண்காட்சியை பார்வையிட்டு வருகிறார்கள். (162-இ)

சுகாதார கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமிகோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ் மாநகரசபை மன்ற சுகாதாரப்பகுதி சுகநல நிகழ்வு என்னும் சுகாதாரக் கண்காட்சி யாழ். மாநகரசபை மன்ற இந்துவிடுதி மைதானத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதி திருமதி சிவனேசமூர்த்தி சம்பிரதாயபூர்வமாக நாடாவை வெட்டி இக்கண்காட்சியை திறந்து வைத்தார்.

மரத்திலிருந்து வீழ்ந்து மரணம்

(நெல்லியடி)

இளம் குடும்பஸ்தர் ஒருவர் மரத்திலிருந்து தவறி நிலத்தில் வீழ்ந்து பரிதாபமாக மரணமானார்.

இச்சம்பவம் அண்மையில் உடுப்பிட்டி நவிண்டிலில் நிகழ்ந்துள்ளது.

ஒரு பிள்ளையின் தந்தையான சிவராசபிள்ளை ஜெயராசா (வயது 35) என்பவரே மரணமடைந்தவராவார். 160

உள்ளூர் உற்பத்திக்கு ஊக்கமளிக்க வேண்டும்

— டொமினிக்

(உடுவில்)

"பழமையான நமது பாரம்பரிய நடைமுறைகளை, பழக்க வழக்கங்களை மீண்டும் நாம் கடைப்பிடிக்க வேண்டும். எமது உள்நாட்டு உற்பத்திகளுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளிக்க முன்வரவேண்டும். ஊட்டச்சத்து மிகுந்த நம் நாட்டு மூலிகைகள் நமது உணவில் சேர்த்துக்கொள்ள நாம் எமது உடல் பலமுடன் பொருளாதார பலமும் ஏற்படும்."

மானிப்பாயில் நடைபெற்ற சித்த மருத்துவ பொருள் கண்காட்சியை திறந்து வைத்து உரையாற்றிய தமிழீழ நீதிச் சேவைப் பொறுப்பாளர் திரு. ஈ. டொமினிக் மேற்கண்டவாறு கூறினார்.

மானிப்பாயில் உள்ள தென்னம் பனம்பொருள் அபிவிருத்தி நிலையப் பணிமனையில் மேற்படி கண்காட்சி மூன்று தினங்களாக நடைபெற்றது.

பனை—தென்னை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தினர் திரு. இ. கந்தசாமி தலைமையில் இக்கண்காட்சியை நடத்தினார்கள்.

அவர் மேலும் கூறியதாவது:

அமெரிக்கா வழங்கிவரும் மாவை நாம் கட்டுப்பாடின்றி பயன்படுத்துகிறோம். [illegible] அறிமுகம் [illegible] தேயிலை—கோப்பி பாவனையை விட மோசம் கொண்டுள்ளோம். இவற்றைவிட எமது சுதேச பொருட்களில் இருந்து நாம் அதிக பலனடையலாம்.

எமது பிரதேசத்தில் உடலுக்கு வலுவைத் தரும் ஊட்டச் சத்து நிறைந்த பல மூலிகைகள் உண்டு. அவற்றிலிருந்து பெறப்படும் பொருட்களை — பானங்களை நாம் பயன்படுத்தவேண்டும். அதனால் எமது சுதேச பொருள் உற்பத்தி, வேலைவாய்ப்பு, பொருளாதார வளர்ச்சி ஏற்பட வழியுண்டாகும். தேயிலை, கோப்பிக்கு என செலவிடும் பணமும் மிச்சமாகும்.

சமீபத்தில் உற்பத்தி செய்யப்பட்ட நறுபானம், இந்த மருத்துவ குளிர்பானம் போன்றன கண்காட்சியில் பார்வைக்கு வைக்கப்பட்டன.

சித்த வைத்திய கூட்டுறவுச் சங்க ஆலோசகர் திரு. பால சுப்பிரமணியம், கிராமிய மக்கள் வங்கி கிளை முகாமையாளர் திரு. எ. கோபால கிருஷ்ணன் உட்பட பலர் உரையாற்றினர். —109

பசுமை பூத்துக் குலுங்கும் கேணல் கிட்டு நினைவுப்பூங்கா

(யாழ்ப்பாணம்)

நாம் இருக்கும் நாடு நமதென்பதறிவோம். என்ற வகையில் இன்று எங்கள் திருநாட்டிலே என்றுமில்லாத நல்ல, சிறந்த நோக்குடன் ஒரு அகம் சோலைகள், குவிந்த [illegible], இருவர் [illegible] பூங்காவை உருவாக்கியிருக்கிறார்கள். கேணல் கிட்டு நினைவு இருவர்பூங்கா நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

அழகு குலுங்கும் இந்தப் பூங்காவில் பிரதான வாயிலில் தமிழ் மன்னன் மாவீரன் சங்கிலியன் குதிரைமீதேறிய [illegible] தமிழனின் வீர வரலாற்றை ஒருமுறை நினைவு கூருகிறது. மைதானப்பகுதியில் தமிழீழ மண்ணைக் காத்து வரலாறு படைத்த மாவீரர்களின் உருவச்சிலை கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. அவர்களை நினைவுகூரும்போது எழுச்சியும் பசுமை பாய்ந்தோடுகிறது.

நல்ல நோக்குடன் நிதானமான சிந்தனையுடன் திட்டமிட்டு இந்த ஒரு அழகும் பூஞ்சோலையாக அமைக்கப்பட்டு பசுமையான [illegible] மற்றும் செடிகள் கொடிகளால் இப்பூங்கா உருவாக்கப்பட்டிருக்கிறது.

எமது தாய்நாட்டை மீட்டெடுக்க தமது இன்னுயிரை ஈந்த வீரர்களின் திருவுருவப் படங்களைப் பார்க்கும்போது அவர்களின் தியாக வரலாறு நம் கண்முன் விரிகிறது. சோதனைத் [illegible] தந்திருக்கிறார்கள் இந்த மாவீரர்கள், இந்தப் பூங்காவில் வரலாறும் அழகும் [illegible] எதையும் பூத்துக் குலுங்குகிறது.

தெய்வீகமான ஆடி அசைந்து ஆனந்தமாய் நடந்து செல்வதற்கு வசதி அளிக்கிறது. [illegible] ஓங்கி உயர்ந்து கம்பீரமாக நிற்கிறது. [illegible] இனிமையைப் பூஞ்சோலை காட்டுகிறது. [illegible] ஏதிச் செல்லத்தக்க [illegible], இப்பூங்காவின் [illegible] பலவர்ண மின்குமிழ்கள் நிரந்தரமாகப் பொருத்தப்பட்டிருப்பது கண்கொள்ளாக் காட்சியாக உள்ளது.

மண்ணின் [illegible] அமைக்கப்பட்டிருக்கும் குளங்கள், அவைகளுக்குள் அமைக்கப்பட்டிருக்கும் மீன் தொட்டிகள் பார்வையாளர்களை வியப்புக்குள்ளாக்குகிறது. எமது கண்களில் உயிர் துடிப்பு [illegible] மிருக [illegible] எமது விடுதலைப்புலி வீரர்களின் [illegible] சாதனைகளை [illegible] வீரசாதனைகளை படம் பிடித்துக் காட்டுகிறது. இப்படியான பல வீரசாதனைகளை நாம் இந்தப் பூங்காவில் ஆங்காங்கே காணக்கூடியதாக உள்ளது.

ஓய்வெடுப்பதற்கு வசதியாக அழகான சாதனமான தளபாடம் இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. [illegible] எமது நாட்டிலும் [illegible] வசதிகள் [illegible] தேவை [illegible] எடுத்துக்காட்டாக இப்பூங்கா விளங்குகிறது.

அழகுச்சோலை — இலக்கிய வரலாறு, எதிர்கால சந்ததியினர் இவற்றை ஒன்றாக காண இப்பூங்கா பெரும் பங்கு வகிக்கிறது என்றால் அது மிகையாகாது. —162-இ

றேடியோ திருத்தும் பயிற்சி நெறி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் யாழ் வடமராட்சி கல்வித்திணைக்களம் முறைசாராக் கல்விப்பிரிவு பாடசாலைகளை விட்டு விலகிய மாணவர் மாணவிகளுக்கு றேடியோ திருத்துதல் தொழில் நுட்பப்பயிற்சியினை வழங்கும் பயிற்சிநெறியொன்றை ஆரம்பிக்கவுள்ளது.

இந்த றேடியோ திருத்துதல் தொழில் நுட்பப்பயிற்சிநெறியில் பயிற்சிபெற விரும்பும் வெளிவாரியானோரும் இருபாலரும் வேலாயுதம் மகாவித்தியாலய அதிபரிடம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கெயர் உதவியுடன் குளங்கள் புனரமைப்பு

(உடுவில்)

கெயர் நிறுவனத்தின் உதவியுடன் குளங்களை புனரமைப்பு செய்வது சம்பந்தமான கலந்துரையாடல் கூட்டம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெற்றது.

கந்தரோடை பகுதி உதவி திட்டமிடல் அதிகாரி திரு. [illegible] தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கெயர் ஸ்தாபன பிரதிநிதிப்பணிப்பாளர் [illegible] யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள ஐந்து குளங்களை புனரமைப்பு செய்து நீர்ப்பாசனத்துக்கு தேவையான மாற்றியமைப்பது சம்பந்தமான விளக்கம் அளித்தார்.

வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேசசபை திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் திரு. த. தேவராஜன் கந்தரோடை கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் திரு. க. நடராசா கந்தரோடை கிராமசேவையாளர் திரு. திருநாவுக்கரசு உட்பட பல உற்பத்திக்குழு உறுப்பினர்கள், விவசாயிகள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

ஒவ்வொரு குளமும் தலா ஒரு லட்சத்து நாற்பதாயிரம் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

கெயர் ஸ்தாபனம் இதில் 90 ஆயிரம் ரூபாவை வழங்க உள்ளது. ஏனைய 50 ஆயிரம் பொதுமக்களின் பங்களிப்பு சிரமதானத்தின் மூலமாக பெறப்பட உள்ளன. —109

'கல்விச்சேவைசெய்தவர்களை நாம் மறக்கக் கூடாது'

(வட்டுக்கோட்டை)

சேவை செய்தவர்களை முக்கியமாக கல்விச் சேவை செய்தவர்களை நாம் ஒவ்வொருவரும் மறக்கக் கூடாது. இன்று பாராட்டும் பெறும் பண்டிதர் ஈஸ்வரநாதபிள்ளை செய்த கல்விப்பணியினை நாம் என்றுமே மறக்க முடியாது.

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் தமிழ், சைவ விரிவுரையாளராகக் கடமையாற்றி இளைப்பாறிச் செல்லும் பண்டிதர் க. ஈஸ்வரநாதபிள்ளைக்கு நடாத்தப்பட்ட சேவை நலன் பாராட்டு விழாவில் தலைமையுரை நிகழ்த்திய அதிபர் சைவப்புலவர் நா. க. [illegible] மேற்கண்டவாறு கூறினார்.

ஆசிரியமணி எ. சின்னத்துரை, ஆசிரியை திருமதி க. அருணகிரிநாதன், ஆசிரியர் எ. ஸ்ரீஸ்பரமேசன், திருமதி அன்னராணி கதிர்காமநாதன் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். —189

நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர்

நெருக்கடிகளுக்கு மத்தியிலும் நீதிமன்றங்கள் செயற்படுகின்றன

— பரா உரை

(உடுவில்)

“எமது மக்களின் நீதியாகவும், தேவையாகவும், மற்றவர்களால் சுரண்டப்படாமல் வாழவைக்க வேண்டுமென்ற நன்நோக்குடன் தேசியத் தலைவரால் தமிழீழத்தில் நீதிமன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன. நீதிமன்ற நடவடிக்கைகளைப் பற்றி பூரணமாகத் தெரியாத நிலையில் நீதிமன்றங்களை ஆரம்பிக்கும்போதும் இன்று அவற்றின் நிர்வாக அமைப்பு ஒழுங்காகவும், சிறப்பாகவும் நடைபெற்று வருகின்றன.

சுன்னாகம் மாவட்ட நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு பூர்த்திவிழா கொண்டாட்டங்களில் கலந்து கொண்ட நீதிநிர்வாகத் துறைப் பொறுப்பாளர் திரு. பரா மேற்கண்டவாறு கூறினார்.

ஓராண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் வகையில் நீதிமன்ற ஊழியர்கள், சட்டவாளர்கள், காவல்துறையினர் போன்றோரால் நடாத்தப்பட்ட இவ்விழாவுக்கு நீதியாளர் செல்வி சாரா தலைமை வகித்தார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய திரு. பரா மேலும் கூறியதாவது:

மக்களுக்கு தேசிய தலைவர் மீதுள்ள நம்பிக்கையும், நீதியாளர்கள் வழங்கும் நியாயமான தீர்ப்புமே நீதிமன்றங்களைச் சிறப்புடன் இயங்க வைக்கின்றன.

அளிக்கப்பட்ட தீர்ப்புகளுக்கு எதிராக மிகக் குறைந்த அளவு எண்ணிக்கையான வழக்குகளே மேல் நீதிமன்ற விசாரணைகளுக்கென தாக்கல் செய்யப்படுகின்றன. இது எமது தீர்ப்பில் மக்கள் கொண்டுள்ள திருப்தியை எடுத்துக்காட்டுகிறது.

நாம் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் நீதிமன்றங்களை அமைத்தோம். நீதியாளர்கள், சட்டவாளர்கள், காவல்துறையினர் மற்றும் பொதுமக்களின் ஒத்துழைப்பும் சேவை மனப்பான்மையுமே ஓராண்டு காலத்தில் ஆயிரக்கணக்கில் வழக்குகளைத் தீர்க்கவைத்தது.

நீதி நிர்வாகம், காவல்துறை இரண்டும் விடுதலைப்புலிகளின் அரசியல் கட்டமைப்பில் தமிழீழ அமைந்ததன் பின்னர் நீதியாளர்களுக்கும் சட்டவாளர்களுக்குமாக நாம் பிறரை எதிர்பார்க்காமல் இருக்கவேண்டும். எமது போராளிகளே ஆரம்ப நீதியாளர்களாகவும் சட்டவாளர்களாகவும் கடமையேற்று ஆரம்பித்துள்ளோம்.

மக்களுக்குப் பூரணமாக நீதி கிடைக்க வேண்டுமென்பதற்காக உழைத்துவரும் நீதியாளர்கள், சட்டவாளர்களுக்கு அனுபவமுடையவர்கள் வழிகாட்டவேண்டும். — 109

மணிவாக்கு

பகுத்தறிவு பூத்துக் குலுங்கத் தொடங்கும் போதுதானே மனிதனுக்கும் பயம், சோகம் எல்லாம் வருகின்றன.

- கவிஞர் கண்ணதாசன்

நமது நோக்கு

நல்லதையே எண்ணுவோம்!

“யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர மக்களின் ஆணையைப் பெற்றுவிட்டோம்!” எனப் பிரதமர் சந்திரிகா நாட்டு மக்களுக்கு ஆற்றிய முதலாவது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

இனவாதப் பிரசாரம் தோல்வி கண்ட இந்த ஆக்க வாய்ப்பைப் பயன்படுத்தி இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

ஆனால் - சில சர்வதேச செய்தி நிறுவனங்கள் நம்பிக்கை இன்மையை ஏற்படுத்தும் விதத்தில் விமர்சனங்களை வெளியிட்டு வருகின்றன.

“கடுமையான எதிர்ப்பைச் சந்திக்க வேண்டும்!” என்கிறது ஒரு செய்தி நிறுவனம்.

“புலிகளின் கோரிக்கையைச் சந்திரிகா ஏற்பாரா?” எனச் சந்தேகத்தைக் கிளப்புகிறது இன்னோர் செய்தி நிறுவனம்.

புதிய அரசைப் பூரணமாக வரவேற்க முடியாத நிலை இவருக்கு ஏற்படலாம்.

ஆனால் - புதிய அரசு செயற்படத் தொடங்கு முன்பே - பகிடி செய்வது போல அவசரப்பட்டு அவநம்பிக்கையை ஏற்படுத்தலாமா?

பிறந்த குழந்தை பிரசவ அறையிலிருந்து வெளியே வர முன்பே, ஓட்டப் பந்தயத்திற்குத் தயாரா எனக் கேட்டு அவசரப்படலாமா?

விதைக்க முன்பே, “மழை வருமா? பயிர் வருமா?” என விவசாயி ஏங்கினால் வேளாண்மை வெற்றி தருமா?

தென்னாபிரிக்க வெள்ளையின நிறவெறியர்கள் அமைதி வழிக்கு வரவே மாட்டார்கள் என எண்ணியிருந்தவர்கள் ஏமாந்து போனதைத்தானே அண்மையில் கண்டோம்.

பரமவைரிக் கழுத்திலிருந்த பாம்பு போல, அமெரிக்காவின் தோளிலிருந்த இஸ்ரேல் இறங்கி வரவில்லையா?

“நல்ல உணர்வுகள் தான் நல்ல சிந்தனைகள் தான் நம்மை வாழவைக்கும்!” என்கிறார்கள் உளவியல் அறிஞர்கள்.

“நல்ல மனவியல் சிந்தனை” (Positive Thinking) என்ற கோட்பாட்டை அமெரிக்கச் சிந்தனையாளர் நோர்மன் வின்சன்ட் பீல் அண்மைக்காலமாகப் பிரபலப்படுத்தி வருகிறார்.

இன்னும் - சர்வதேச அரசியல் பிரச்சினைகளின் தீர்வுகளில், புதிய கண்ணோட்டத்தோடு அணுகுமுறைகள் கையாளப்படுகின்றன.

நேர்மை, வீரம், துணிவு, மன்னிக்கும் மனோபாவம் போன்ற நல்லனவற்றை எண்ணுவோம்; நல்லனவற்றையே பெறுவோம்!

தெய்வீக இசையரங்கு இன்றைய நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவத்தை முன்னிட்டு நாவலர் மணிமண்டப முன்றலில் நடைபெறும் தெய்வீக இசையரங்கில் இன்றைய நிகழ்ச்சிகள்

இன்று 23ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6-00 மணி தொடக்கம் 7-00 மணி வரை நாதஸ்வர கச்சேரி பாட்டு வயலின் பாக்கியலட்சுமி நடராசா மிருதங்கம் எஸ். துரைராசா

இரவு 7 00 மணி தொடக்கம் 8-00 மணி வரை எஸ். கணபதிப்பிள்ளை பாட்டு வயலின் எஸ். வெங்கடேஸ்வரசர்மா மிருதங்கம் எஸ். மகேந்திரன். (ம)

இராசி பலன்

23 08 1994

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு ஆவணி 07)

துதியை பி. ப. 1-38 வரை; பூரட்டாதி மு. இ. 8-23 வரை. மரணயோகம் இராகு காலம் 3-05 முதல் 4-35 வரை. சுபயோகம் காலை 10-35 முதல் 12-00 வரை.

மேடம்: பெண்கள் பாராட்டு, பயண நன்மை, இனிய சுபகாரியம்.

இடபம்: தொழில் வரவு, அறிஞர் சந்திப்பு, குடும்ப சுகம்.

மிதுனம்: நம்பிக்கை மோசடி, பணமுடக்கம், தவிர்ப்பு.

கடகம்: குடும்ப வேற்றுமை, தவறிழைத்தல், அச்சம்.

சிம்மம்: மேலோர் நட்பு, பகைவர்கள் உதவி, புகழ்.

கன்னி: இனசன வருகை, தொழில் லாபம், பெண் வரவு.

துலாம்: விரோதிகள் கவலை, ஏமாற்றம் யோசனை.

விருச்சிகம்: அதிகாரிகள் துயர், உடல் உபாதை, மனச்சஞ்சலம்.

தனுசு: அறிவாளர் தாக்கம், குடும்பச் சிறப்பு, காரிய வெற்றி.

மகரம்: பதவி மாற்றம், சகோதர தொல்லை, இழப்பு.

கும்பம்: எண்ணியவை எய்துதல், சுற்றம், முதியோர் ஆசி.

மீனம்: பெரியோர் உணர்வு, மனவேதனை, பழிச்சொல்.

ஜோஸ்யர்

பலதும் பத்தும்

மக்களுக்கு இரை!

அண்மையில் நடந்த தேர்தலில் பல அமைச்சர்கள் தோல்வியடைந்தனர் எனலாம்? அதாவது ஆட்சியிலிருந்தவர்கள் மக்களின் கோபத்திற்கு இரையாகி விட்டார்கள்!

பல ஆண்டுகளுக்கு முன் கோவைக்குடியில் திருக்குறள் மாநாடு நடந்தபோது... ஒரு சுவையான சம்பவம்!

பட்டிமன்றத்தில் பேசிய திரு. கணேசன், “முறை செய்து காப்பாற்றும் மன்னன் மக்களுக்கு இறையென்று வைக்கப்படும்!” என்ற மேற்கோளைக் காட்டினார். இறை என்றால் கடவுள்.

உடனே எழுந்த திரு. அ. ஞானசம்பந்தன் “முறை செய்து காப்பாற்றவில்லையானால் மன்னன் மக்களுக்கு இரை!” என்று திருத்தினார்! தோல்வியுற்ற அமைச்சர்களை நினைவுபடுத்தி! கைதட்டல் ஓய சில நிமிடங்கள் சென்றன...!

— மயூரன்

புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-08-23 செவ்வாய் இரவு

8-01 - ஊர் சுற்றும் ஒலிவாங்கி
8-10 - அறிந்துகொள்ளுங்கள் தகவல் களஞ்சியம்
8-20 - கலந்துரை “திருவிழாக் காலங்களில் பரவக்கூடிய தொற்று நோய்கள்”
8-30 - செய்திகள்
8-40 - கருத்துக்களம் “நகை”
8-50 - [illegible] “எதிர்பார்ப்பு”

1994-08-24 புதன் காலை

7-02 - மாவீரர் வணக்கம்
7-15 - நீங்கள் கேட்டவை
7-30 - செய்திகள்
7-35 - பத்திரிகைச் செய்திகள்
7-40 - நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

மட்டக்களப்பில் இரவு வேளையில் படையினர் வன்முறை

(கொழும்பு)

மட்டக்களப்பில் சில இடங்களில் பொலிஸ் அதிரடிப் படையினர் இரவு வேளைகளில் தமிழர்களின் வீடுகளுக்குள் புகுந்து தமிழர் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிடுகின்றனர்.

கடந்த வார இறுதிப் பகுதியில் மட்டு—வீரன்கேணி 2-ம் குறிச்சிப் பகுதியில் இரவு 9 மணியளவில் இரு வீடுகளுக்குள் பொலிஸ் அதிரடிப் படையினர் நுழைய முயன்றனர். இதனைத் தொடர்ந்து வீட்டிலிருந்தோர் சத்தமிட்டதையடுத்து அவர்கள் ஓடி மறைந்துவிட்டனர்.

இதேபோன்ற சம்பவங்கள் மேலும் சில இடங்களில் நடைபெற்றுள்ளன. இரவு வேளைகளில் கொள்ளை முயற்சிகளில் ஈடுபடுவதற்கும் தகாத செயல்களில் ஈடுபடுவதற்குமே படையினர் இவ்வாறு வீடுகளினுள் புக முயற்சிப்பதாக தெரியவருகிறது. இச்சம்பவங்களால் மக்கள் மத்தியில் பதற்றம் நிலவி வருகிறது. —மி

புதிய உணவகம்

(நெல்லியடி)

யாழ். போதனா வைத்தியசாலையின் தேவைகள் நலன்புரிச் சங்க ஆதரவில் மருத்துவத்துறை அருகே வைத்தியசாலை உணவகம் திறந்து வைக்கப்பட்டது.

பிரெஞ்சு வைத்திய குழுவின் மொத்த நிர்வாக உத்தியோகத்தர் செல்வி எடிச், தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவைச் சேர்ந்த சாந்தன், மருத்துவத்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை ஆகியோர் மங்கள விளக்கேற்றினார்கள்.

டாக்டர் எஸ். [illegible] தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் உணவகத்தை விடுதலைப் புலிகள் மருத்துவப் பிரிவைச் சேர்ந்த திரு. [illegible] நாடா வெட்டித் திறந்து வைத்தார். -160

தமிழீழ நீதிமன்றில்....

கசிப்பு கோடா வைத்திருந்தவருக்கு 55,000 ரூபா தண்டம்

(யாழ்ப்பாணம்)

சட்ட விரோதமாக கசிப்புக் கோடா வைத்திருந்த நபர் ஒருவருக்கு யாழ் மாவட்ட தமிழீழ நீதிமன்று 55,000 ரூபா தண்டம் செலுத்துமாறு தீர்ப்பளிக்கப்பட்டது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது, கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த ஒருவர் சட்டவிரோதமாக கசிப்பு தயாரிக்கப்படும் கோடா மற்றும் ஒரு போத்தல் கசிப்பு வைத்திருந்தாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டு தொடரப்பட்ட வழக்கு யாழ். மாவட்ட தமிழீழ நீதிமன்ற நீதியாளர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து நீதியாளரால் எதிரிக்கு 55,000/- தண்டப்பணம் செலுத்துமாறு தீர்ப்பளிக்கப்பட்டது. தண்டம் செலுத்தத் தவறும் பட்சத்தில் இரண்டு வருடங்கள் சிறைத்தண்டனை என்றும் அத்தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. -162

துணையாக நீயிருப்பாய் என்றுமே...

நல்லைப்பதி வாழுகின்ற நாதனே
நாடிவந்தோர் வினைதீர்க்கும் வேலனே

இக்கலியுகம்போல் ஒருதெய்வமே எமக்கு
எண்ணிய நல் வரங்களைத் தருவோனே
அல்லலுற்று நாமெல்லாம் அலைகிறோம்
ஆறுதலெமக்கு நீயல்லால் வேறுயார்

எங்கேயிருந்தாலும் உன்புகழைப் பாடுவோம்
இன்பத்தமிழ்ப் பாமாலை சூடுவோம்
சொல்லவொண்ணா துன்பங்களை நீக்கியே
துணையாக நீயிருப்பாய் என்றுமே!

— வை. யோகானந்தசிவம்

(இன்று நல்லைக்கந்தன் 12ம் திருவிழா)

இயற்கை எம் உடைமை - அதைக் காப்பது நம் கடமை

ஜனாதிபதிதேர்தலில் ஐ.தே.க படுதோல்வி பெறும் அறிகுறி

சிறிகோதா வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் படுதோல்வி அடைவதற்கான அறிகுறிகள் இப்போது கட்சிக்குள் ஏற்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைச் செயலகமான சிறிகோதா வட்டாரங்கள் இவ்வாறு தெரிவித்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஒரு இழுபறிநிலை ஏற்பட்டுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு திரு. ரணில் விக்கிரமசிங்காவும், திரு. காமினி திசாநாயக்காவும் போட்டி போட ஆரம்பித்துள்ளனர். இதேவேளையில் நடந்த பொதுத் தேர்தலில் 38 லட்சம் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக வாக்களித்துள்ளனர்.

இந்நிலையில் கட்சிக்குள் இழுபறிநிலை அதிகரிக்குமானால் ஜனாதிபதித்தேர்தலில் ஐ.தே.க. படுதோல்வியடைந்து கட்சியே அழிந்து போகும் என அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (இ)

பீரங்கித் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக் கடற் பிரதேசத்தில் நிலைகொண்டுள்ள கடற்படையினரின் பீரங்கிப் படகு ஒன்று நேற்று மாலை 7-30 மணியளவில் கரையோரப் பகுதியினை நோக்கி கடுமையான பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டது. உ-இ

தேர்தலில் மோசடிகள் இடம்பெற்றன!

(கொழும்பு)

நடைபெற்றுமுடிந்த நாடாளுமன்ற தேர்தலில் ஊழல் மோசடிகள் மற்றும் ஆள்மாறாட்டம் போன்றவை இடம்பெற்றுள்ளதாக சர்வதேச அவதானிகள் குழுவினர் தாம் வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தேர்தல் பிரசாரங்களின் போதும் வாக்களிப்பு நேரத்திலும் மக்கள் பயமுறுத்தப்பட்டுள்ளனர் எனவும் அரச வாகனங்கள் பல அதிகாரமற்றவர்களினால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாகவும் அரசாங்க கட்டுப்பாட்டில் உள்ள வானொலி தொலைக்காட்சி மற்றும் லேக்ஹவுஸ் பத்திரிகை போன்றவற்றை தமக்கு சாதகமாக ஐ.தே.கட்சி பயன்படுத்தியுள்ளது என்றும் சர்வதேச அவதானிகள் குற்றம் சாட்டியுள்ளனர். (உ-இ)

★ ஆங்கிலக் கால்வாயை 9 வயதுச் சிறுமி நீந்தி சாதனை!

(லண்டன்)

பம்பாயைச் சேர்ந்த குமாரி [illegible] என்ற 9 வயது இந்தியச் சிறுமி ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்து உலக சாதனை படைத்துள்ளார்.

ஆங்கிலக்கால்வாயை நீந்திக் கடந்தவர்களுள் வயது குறைந்தவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் தமிழக சிறுவன் குற்றாலீஸ்வரன் (வயது 12) ஆங்கில கால்வாயை நீந்தி சாதனை புரிந்தது தெரிந்ததே.

பம்பாயைச் சேர்ந்த இச் சிறுமி கடந்த 1[illegible]-ம் திகதி 16 மணி நேரத்தில் 18 மைல் நீளமான ஆங்கில கால்வாயை நீந்திக்கடந்தார் என தெரிவிக்கப்பட்டது. (உ-இ)

யாழ். மாவட்டத்தில் ஆசிரியர் தொகை வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

1990ம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் ஆசிரியர் தொகை 8,000க்கு மேலாகவும், இலங்கை முழுவதும் ஆசிரியர் தொகை 1,70,000 ஆகவும் இருந்தது. ஆனால் 1993ல் யாழ் மாவட்டத்தில் ஆசிரியர் தொகை 5,000 ஆக வீழ்ச்சி அடைந்துள்ளது. அதேசமயத்தில் இலங்கை முழுவதும் உள்ள ஆசிரியர் தொகை 30,000த்தால் அதிகரித்து, ஏறக்குறைய 2 லட்சமாக உயர்ந்துள்ளது. கல்வி அமைச்சு, மாகாணக் கல்வி அமைச்சு, யாழ் மாவட்டக் கல்வித் திணைக்களம் ஆகியவற்றின் புள்ளி விபரங்கள் மூலம் இது தெரியவந்துள்ளது என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் 36 வீதமும், கிளிநொச்சியில் 54 வீதமும், முல்லைத்தீவில் 57 வீதமும், மன்னாரில் 56 வீதமும், வவுனியாவில் 42 வீதமும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினால் நடத்தப்பட்ட ஆய்வு அறிக்கை தெரிவிக்கின்றது.

நாட்டின் [illegible] இவ்வளவு மோசமாக ஆசிரியர் பற்றாக்குறை வடமாகாணத்தில், அதிலும் விசேடமாக யாழ் மாவட்டத்தில் இருந்ததில்லை என பொதுச் செயலாளர் கல்வி அமைச்சின் செயலாளருக்கும் கல்விச் சேவைச் சபையின் செயலாளருக்கும் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் ஆங்கில ஆசிரியர்களுக்கு 67வீதப் பற்றாக்குறையும், ஆரம்ப ஆசிரியர்களுக்கு 48 வீதப் பற்றாக்குறையும், விஞ்ஞானம், கணித ஆசிரியர்களுக்கு 21 வீதப் பற்றாக்குறையும் ஏனைய ஆசிரியர் வகையினர்க்கு 42 வீதப் பற்றாக்குறையும் நிலவுகின்றது.

90, 91, 92, 93ம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட போட்டிப்பரீட்சைகளின் அடிப்படையில் ஓர் ஆசிரியரேனும் வட மாகாணத்திற்கு நியமிக்கப்படவில்லை.

இதேகாலப் பகுதியில் வடமாகாணத்திற்கு ஏனைய மாகாணங்களில் நியமிக்கப்பட்டது போல, [illegible], [illegible] உடற் கல்வி ஆசிரியர்கள் தொழில் நுட்ப ஆசிரியர்கள் ஒருவராவது நியமிக்கப்படவில்லை என்பதைத் தெளிவாக கூறமுடியும் எனப் பொதுச் செயலாளர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இதேகாலப் பகுதியில் நியமிக்கப்பட்ட விஞ்ஞான/கணித ஆசிரியர்கள், ஆரம்ப ஆசிரியர்கள், பட்டதாரிகளில் எவரும் கடமை ஏற்காத நிலையிலும், அமைச்சின் புள்ளி விபரங்கள் அவர்களும் கடமை ஏற்றதாகக் கணக்கிடப்படும் பிழையான புள்ளி விபரமாகக் காணப்படுகின்றது எனவும் கருத்தில் பொதுச் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு மாகாணத்திலும் [illegible] ஏற்றத்தாழ்வு இது போன்றதாகவே உள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. -இ

பொ ச மு பதவி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளதாவது: நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் ஐ.தே.கவின் தோல்வி உறுதியாக ஏற்பட்டதும் அவர்களால் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டதாகவும் இதனை அடுத்து நாட்டைவிட்டு தப்பியோடுவதற்கான முன்னேற்பாட்டுமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏயார்லங்காவின் பிரிட்டிஷ் சேவை, சிங்கப்பூர் விமான சேவை ஆகியவற்றில் பயணத்துக்கு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாடு அனுமதி வழங்கும் இலாகாக்கள் இத்தகவலை உறுதிப்படுத்தியுள்ளதாக "ஹிரு" பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

முன்னாள் நிதி திட்டமிடல் அமைச்சர் ரொனி டி மெல், மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி திஸநாயக்க, ஜனாதிபதியின் ஆலோசகர் டாக்டர் விக்கிரமவீரசூரிய, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேன கூரே, உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமாரச்சி, வெளியுறவு அலுவல்கள் அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் மற்றும் ஏ. எம். எஸ். அதிகாரி, உள்ளிட்ட 500 பேர் வெளிநாடு செல்ல தயாராக முன்பதிவு மேற்கொண்டவராம்.

கடந்தகால ஆட்சியின் போது மேற்கொள்ளப்பட்ட ஊழல் மோசடிகள், 60 ஆயிரம் இளைஞர்களின் கொலைகள் [illegible] படுகொலைகள் போன்ற விடயங்கள் தொடர்பாக பூரண விசாரணை மேற்கொள்ளப்படும் என புதிய அரசு அறிவித்ததை அடுத்தே இம்முடிவுமேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என "ஹிரு" பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. -உ-இ

இலுப்பையடிச் சந்தி விபத்து: இடம்பெயர்ந்தவர் பலி இளம்பெண் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

[illegible] இலுப்பையடிச் சந்தியில் நேற்று மாலை 3-30 மணியளவில் நடைபெற்ற மினிபஸ்-சைக்கிள் விபத்தில் ஒருவர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டார். இவருடன் பயணம் செய்த இளம் பெண் படுகாயமடைந்த யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை சரவணைப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் வசித்து வந்த இ. [illegible] (வயது 45) என்பவரே உயிரிழந்தவராவார். உ-இ

லேக்ஹவுஸ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிக்கு ஆதரவாக செயல்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

பொதுஜன ஐக்கிய முன்னணி அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பொதுசன தொடர்புசாதனங்களை சுதந்திரமாக மாற்றுவதாக அறிவித்திருந்தது தெரிந்ததே. -இ

படை அதிகாரிகளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மத்தியில் பிரதமர் உரையாற்றுகையில் கூறியதாவது:

ஊழல், மற்றும் கமிஷன் பெறுவது போன்ற நடவடிக்கைகளை ஒழிப்பது, தமது அரசாங்கத்தின் முக்கிய கொள்கையாகும். இக்கொள்கையை அமுல்படுத்துவதற்கு சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

தெளிவான, நேர்மையான கொள்கைகள் பின்பற்றப்படும். தேசிய கட்டமைப்பைக் கொண்ட பெருமைக்குரிய [illegible] ஒன்றை உருவாக்க, என்னை அர்ப்பணித்துள்ளேன். இதற்கு உங்களின் பூரண ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றேன் என்றும் கூறினார். -வீ-இ

ஊழல்கள்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

[illegible] அமைக்கப்படவுள்ள லஞ்ச விசாரணைக்குழு லஞ்ச மோசடிகளை விசாரிக்கும் எனவும் அம்முடிவின் அடிப்படையில் ஊழல் புரிந்தவர்கள் தண்டிக்கப்படுவதோடு அவர்களோடு அவர்களின் சொத்துக்கள் பறிக்கப்படுமெனவும் அறிவித்துள்ளனர்.

முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் பலர் ஊழலில் ஈடுபட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் அனைவரும் தண்டிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந் நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் கடமையாற்றுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. -உ

அமைச்சர்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மத்தியில் உரையாற்றுகையில்,

அரசாங்கங்கள் மாறினாலும் மாற்றமில்லாமல் இருக்கக் கூடிய, தேசியக் கல்விக் கொள்கை ஒன்று உருவாக்கப்படும் என்றார்.

வெளிநாட்டமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமர் தமது அமைச்சின் அதிகாரிகள் மத்தியில் உரையாற்றுகையில்,

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கைக்கு உள்ள [illegible] நிலையை ஏற்படுத்திக்கொடுக்கும் நடவடிக்கைகளை எடுக்கப் போவதாகவும், சகல நாடுகளுடன் நெருக்கமான ராஜீய உறவுகளை ஏற்படுத்தப் போவதாகவும் கூறினார்.

கல்வித்துறை, [illegible] மற்றும் சமூக மறுவாழ்வு அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். எம். அஷ்ரப்

பேச்சுவார்த்தை நெடுஞ்சாலைகள் [illegible] அமைச்சர் திருமதி சிறிமணி அத்துலத்முதலி.

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. சி. வி. குணரத்ன வீடமைப்பு நிர்மாணம் மற்றும் பொதுவசதிகள்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. [illegible]

ஊரடங்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் பாதுகாப்பு நிலைமையில் கணிசமான முன்னேற்றம் காணப்படுவதினால் இன்று அதிகாலை 4 மணியுடன் ஊரடங்குச் சட்டத்தை நீக்கி விடுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

பிரதமமந்திரி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கவின் வேண்டுகோளின் பேரிலேயே ஊரடங்குச் சட்டம் ரத்துச் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் வன்செயல்கள் மீண்டும் தலைதூக்கினால் மறுபடியும் காலவரையறையின்றி ஊரடங்குச்சட்டம் மீண்டும் அமுல்படுத்தப்படுமென்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது (வீ-இ)

லஞ்சம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று தமது அமைச்சுக்கான பொறுப்பை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்டபின் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் புதிய அரசாங்கம், லஞ்சம், ஊழல் ஆகியவற்றை ஒழித்துக் கட்டுவதில் விசேட கவனம் செலுத்தும் என்றும் விசாரணை செய்யும் அதிகாரிகள் எதுவித தலையீடுமின்றி சுதந்திரமாக தமது கடமையை மேற்கொள்ளக் கூடிய பொருத்தமான சூழ்நிலை உருவாக்கப்படும் என்றும்;

மக்களுக்கு சிறந்த சேவையை திறமையாக [illegible] முறையை நீக்கிவிட்டு விசேட சபை ஒன்றை நியமிக்க தாம் எண்ணியிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (உ-இ)

முன்னாள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எனவே வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு வாகனங்களைத் தொடர்ந்து சில காலம் வைத்திருப்பதற்கு அனுமதி வழங்குமாறும் அவர்கள் ஜனாதிபதியிடம் கேட்டுள்ளனர்.

ஆனால் இவ்வாகனங்கள் யாவும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களினால் வழங்கப்பட்டன என்றும், எனவே இவ்வேண்டுகோளைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க திட்டவட்டமாக தெரிவித்துவிட்டாராம்.

முன்னாள் அமைச்சர்கள் அனைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்கும் பட்சத்தில், அவர்கள் தமது பாதுகாப்பைத் தாமாக உறுதிப்படுத்திக்கொள்ள முடியாவிட்டால் அவர்களுக்கும் பாதுகாப்பு வாகனங்கள் வழங்குவது பற்றி பரிசீலனை செய்யுமாறும் பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி கேட்டுள்ளார். உ-இ

[illegible] சுகாதார மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் ஏ. எச். எம். [illegible] கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் இந்திக குணவர்த்தன [illegible] அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி, இளைஞர் [illegible] கிராமிய [illegible] துறை அமைச்சர் டி. எம். எஸ். பி. திஸநாயக்க ஆகியோரும் தமது அமைச்சின் பொறுப்புகளைப் பொறுப்பேற்றுள்ளனர். (வீ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the General Post Office Sri Lanka under License Number QD/[illegible]/News